## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 5-8 - ஆராவமுதே[1]
### (ஆசைப்பட்ட பயன் கிடையாமையால், ஆராவமுதாழ்வாரிடத்தில் ஆழ்வார் தம் அநந்யகதித்வத்தை [வேறெவரும் புகலில்லாமையை] முன்னிட்டுக் கொண்டு தீராத ஆசையுடன் ஆற்றாமை பேசி அலமருதல்)

3194 * ஆராவமுதே! அடியேன் உடலம்[2] * நின்பால் அன்பாயே *
நீராய் அலைந்து கரைய * உருக்குகின்ற நெடுமாலே! **
சீரார் செந்நெல் கவரி வீசும் * செழுநீர்த் திருக்குடந்தை *
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய்! * கண்டேன் எம்மானே! 1

3195 எம்மானே! என் வெள்ளை மூர்த்தி! * என்னை ஆள்வானே *
எம்மா உருவும் வேண்டுமாற்றால் * ஆவாய்! எழிலேறே! **
செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண்மலரும் * திருக்குடந்தை *
அம்மா மலர்க் கண் வளர்கின்றானே! * என் நான் செய்கேனே! 2

3196 என் நான் செய்கேன்? யாரே களைகண்? * என்னை என் செய்கின்றாய்? *
உன்னால் அல்லால் யாவராலும் * ஒன்றும் குறை வேண்டேன் **
கன்னார் மதிள் சூழ் குடந்தைக் கிடந்தாய்! * அடியேன் அருவாணாள் *
செந்நாள் எந்நாள்? அந்நாள் * உனதாள் பிடித்தே செலக் காணே 3

3197 செலக்காண் கிற்பார் காணும் அளவும் * செல்லும் கீர்த்தியாய்! *
உலப்பிலானே! * எல்லா உலகும் உடைய ஒரு மூர்த்தி! **
நலத்தால் மிக்கார் குடந்தைக் கிடந்தாய்! * உன்னைக் காண்பான் நான்
அலப்பாய் * ஆகாசத்தை நோக்கி * அழுவன் தொழுவனே 4

3198 அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் * பாடி அலற்றுவன் *
தழுவல் வினையால் பக்கம் நோக்கி * நாணிக் கவிழ்ந்திருப்பன் **
செழு ஒண் பழனக் குடந்தைக் கிடந்தாய்! * செந்தாமரைக் கண்ணா! *
தொழுவனேனை உன தாள் * சேரும் வகையே சூழ் கண்டாய் 5

3199 சூழ் கண்டாய் என் தொல்லை வினையை அறுத்து * உன்னடி சேரும்
ஊழ் கண்டிருந்தே * தூராக் குழி தூர்த்து * எனை நாள் அகன்றிருப்பன்? **
வாழ் தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய்! * வானோர் கோமானே! *
யாழின் இசையே! அமுதே! * அறிவின் பயனே! அரியேறே! 6

3200 அரியேறே! என் அம்பொற் சுடரே! * செங்கண் கரு முகிலே! *
எரியே! பவளக் குன்றே! * நால் தோள் எந்தாய்! உனதருளே **
பிரியா அடிமை என்னைக் கொண்டாய்! * குடந்தைத் திருமாலே! *
தரியேன் இனி உன் சரணம் தந்து * என் சன்மம் களையாயே 7

---
[1] இது கோவில் திருவாய்மொழி
[2] உடலும்

3201 களைவாய் துன்பம் களையாதொழிவாய் * களைகண் மற்றிலேன் *
வளைவாய் நேமிப் படையாய்! * குடந்தைக் கிடந்த மாமாயா! **
தளரா உடலம் எனதாவி * சரிந்து போம்போது *
இளையாது உனதாள் ஒருங்கப் பிடித்து * போத இசை நீயே 8

3202 இசைவித்து என்னை உன் தாள் இணைக் கீழ் * இருத்தும் அம்மானே! *
அசைவில் அமரர் தலைவர் தலைவா! * ஆதிப் பெரு மூர்த்தி! **
திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் * திருக்குடந்தை *
அசைவில் உலகம் பரவக் கிடந்தாய்! * காண வாராயே 9

3203 * வாரா வருவாய் வருமென் மாயா! * மாயா மூர்த்தியாய்! *
ஆரா அமுதாய் அடியேன் ஆவி * அகமே தித்திப்பாய் **
தீரா வினைகள் தீர என்னை ஆண்டாய்! * திருக்குடந்தை
ஊரா! * உனக்காட்பட்டும் * அடியேன் இன்னம் உழல்வேனோ? 10

3204 * உழலையென்பின் பேய்ச்சி முலையூடு * அவளை உயிர் உண்டான் *
கழல்கள் அவையே சரணாகக் கொண்ட * குருகூர்ச் சடகோபன் **
குழலின் மலியச் சொன்ன * ஓராயிரத்துள் இப்பத்தும் *
மழலை தீர வல்லார் * காமர் மானேய் நோக்கியர்க்கே 11

**அடிவரவு:** ஆரா எம்மான் என்நான் செலக்காண் அழுவன் சூழ் அரியேறு
களைவாய் இசை வாரா உழலை மானேய்